007200

கோவை மத்திய சிறை, சிறைகண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை- திரு. ஆர்.கிருஷ்ணராஜ், பி.எஸ்.சி.,
சிறை கண்காணிப்பாளர் . மத்தியசிறை,கோவை.18

எண். 17264 /பொ1 / 2018 நாள்: 06 .5.2020

பொருள்.- சிறைகள் - மத்தியசிறை, கோவை - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள்- தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் குரூப்-2 A பணிகள் - 2017 -2018-ல் நடைபெற்ற தேர்வின் மூலம் திருமதி.டி.நிஷாந்தினி க/பெ இ.தர்மராஜ் என்பவர் தற்காலிக உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறைப்படுத்துதல் - குறித்து.

பார்வை. 1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண். 5994/PSD-D / 2018 நாள்.- 29.10.2018
2. கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணை எண்.34479/இஎஸ்1/2018-17 நாள் 14.11.2018.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.17264/பொ1/18, நாள் 22.11.18

&&&

பார்வை 1ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் மற்றும் பார்வை 2ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவரின் குறிப்பாணையின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2017-2018-ல் நடத்தப்பட்ட தொகுதி-2 தேர்வின் மூலம் தற்காலிக உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.டி.நிஷாந்தினி என்பவர் 22.11.18 முற்பகல் முதல் , இச்சிறையில் தற்காலிக உதவியாளராக பணிக்கு ஆஜராகி பணிபுரிந்து வருகிறார்.

2) இவர் சமர்ப்பித்த சான்றிதழ்கள் அனைத்தும் உண்மைத்தன்மை வாய்ந்தது என சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டதையடுத்து சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரையில் உள்ள நிலுவை வழக்குகளின் தீர்ப்புக்குட்பட்டு (The appointment is subject to the outcome of WPS (if any) pending on the files of the Hon'ble High Court of Madras relating to Group -II A Services /2017-2018 recruitment") இவரது பணி உதவியாளர் பதவியில் இவர் பணியில் சேர்ந்த 22.11.18 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. இதனைத் தொடர்ந்து இவரை 22.11.18 முற்பகல் முதல் உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3) இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறுவதுடன் பவானி சாகர் பயிற்சி நிலையத்தில் உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியையும் நிறைவு செய்தல் வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

6/5/2020

சிறைக்கண்காணிப்பாளர்
மத்தியசிறை,கோவை-18

6/5/20

பெறுநர்-திருமதி.டி.நிஷாந்தினி, உதவியாளர், மத்தியசிறை,கோவை.18
நகல் தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர், சென்னை. 08
நகல் - பொ.2 இருக்கையாளர் (நடப்பு எண்ணில் ) மத்தியசிறை, கோவை. 18(பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு)
நகல்- கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம்.